**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 105/2021**

| | | DEPOSITION OF WITNESS | PW.3 |
|---|---|---|---|
| NAME | தசரதன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 23.06.2026.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் யார் சொல்லி தெரியும் என்றால் ராஜேந்திரன் சொல்லி தெரியும். என்ன பரிகாரம்கேட்டு வழக்குப்போட்டுள்ளார்கள் என்றால் 10 செண்ட் நிலம் கேட்டு வழக்கு போட்டுள்ளார். அதாவது 10 செண்ட் நிலத்தை கோவிந்தராஜ் அபகரித்துள்ளதாகவும் அதை வாங்கி தர சொல்லி ராஜேந்திரன் வழக்குப் போட்டுள்ளதாக சொல்கிறேனா என்றால் ஆமாம்.

2. முதல் பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லி தயார் செய்தார்கள். தமிழ் ஓரளவுக்கு படிப்பேன். ராஜேந்திரனின் 10 செண்ட் நிலத்தை கோவிந்தராஜ் அபகரித்தாக எனது வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதுபோல் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் மற்றும் ராஜேந்திரன் 10 செண்ட் நிலத்தை பரிவர்த்தனை செய்து கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

3. அந்த 10 செண்ட் நிலத்துக்கான செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. கோவிந்தராஜ் அபகரித்துள்ளதாக நான் சொல்லும் 10 செண்ட்க்கு செக்குபந்தி சொல்ல முடியுமா என்றால் முடியாது. சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தாவா சொத்து எங்குள்ளது என்று தெரியாது என்றாலும் அளவுகள் தெரியாது என்றாலும் ராஜேந்திரன் கேட்டுக்கொண்டதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை எந்த வருடம் எந்தெந்த சர்வே நம்பருக்கு செய்து கொண்டார்கள் என தெரியுமா என்றால் தெரியாது.

4. பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து என சொல்லி உள்ளது யார் உடையது என தெரியுமா என்றால் ராஜேந்திரன் உடையது. தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்திரணம் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது விஸ்திரணம் 1 ஏக்கரா 30 செண்ட். 1 ஏக்கரா 30 செண்டை யார் அனுபவிக்கிறார் என தெரியுமா என்றால் ராஜேந்திரன் அனுபவிக்கிறார். கோவிந்தராஜ் எவ்வளவு அனுபவிக்கிறார் என தெரியுமா என்றால் 1 ஏக்கரா 30 செண்ட். கோவிந்தராஜ் 1 ஏக்கரா 30 செண்ட் அவரது மூதாதையர் சொத்து என்றால் சரிதான்.

5. எனக்கு ராஜேந்திரன் மற்றும் கோவிந்தராஜ்க்கு எவ்வளவு சொத்து உள்ளதுஎன தெரியாது என்றாலும் அவர்களுக்குளள பிரச்சனை குறித்து தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2026.06.23 16:19:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.